**பஸ்ஸற பிரதேச சபை - 2022**

--------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பஸ்ஸற பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பஸ்ஸற பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட மொத்த சொத்துக்கள் ரூபா 388,714,149 ஆக இருந்த போதிலும் அத் திகதியில் உள்ளவாறு மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்களின் மீதி ரூபா 388,976,530 ஆகும். | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட ரூபா 15,702,473 தொகை நிதிச் செயற்பாடுகள் கூற்றில் கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பிரதேச அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ரூபா 3,562,438 நிதி ஏற்பாடு ஆண்டின் இறுதியில் மீளத் திருப்பி அனுப்பியமை, மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பிரதேச | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 26,132,529 தொகை நிதிய கணக்கின் பெயரில் போலியான நிதி மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமுரிய ரூபா 160,050 நிர்மாண வேலைகளின் நிறுத்தி வைத்தல் வைப்பு, வைப்புக் கணக்கிலும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டில் 04 நிலையான சொத்து விடயங்களுக்குரிய ரூபா 366,764 தொகை குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | 05 வருடங்களுக்கு முன்னர் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட கெப் வண்டிக்குரிய ரூபா 650,000 தொகை நிதி நிலமைக் கூற்றில் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 03 கணக்கு விடயங்களுக்குரிய பேரேட்டின் பிரகாரம் ஆன கூட்டுத்தொகைக்கும் அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரமான கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 2,555,113 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டுக்கான காரணங்களை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக விதி) கோவை | | | |
| (i) | விதி 217 | பீ.எஸ் 46 படிவத்தின் பிரகாரம் சபைக்குச் | பதிலளிக்கப்படவில்லை. | விதிக் கோவையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சொந்தமான மற்றும் சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | விதி 218 | மீளாய்வாண்டிற்காக சகல காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வு சபையின் மூலம் பரீட்சித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | 2006 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது 03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 88,496 முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை . | மீதியினைப் பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் கடை உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | விளையாட்டு நிலங்களை ஒதுக்குதல், கூறுவிலை கோரல், நகர மண்டத்தை ஒதுக்குதல் மற்றும் பல்வேறு விடயங்களில் மேற்குறிப்பிடப்பட்ட காலாவதியான வைப்புக்கள் ரூபா 1,055,264 ஓய்வு பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்தல் சட்டத்தின் 2 ஆம் பந்தி | 22 சபையின் உறுப்பினர்களுக்கு 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருடாந்த சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. | வருடாந்த சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவி ல்லை. | வருடாந்த சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று வழங்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,399,602 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,248,216 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 7,181,159 | 6,271,199 | 3,599,138 | 2,672,061 | 5,974,702 | 6,644,767 | 4,290,443 | 2,354,324 |
| (ii) | வாடகை | 20,873,872 | 20,481,563 | 15,709,218 | 4,772,345 | 29,884,112 | 21,005,458 | 11,602,690 | 9,402,768 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 826,000 | 743,423 | 743,423 | 0 | 750,100 | 354,797 | 354,797 | 0 |
| (iv) | ஏனைய வருமானம் | 14,569,500 | 21,629,273 | 12,220,263 | 9,409,010 | 11,904,000 | 14,261,548 | 8,667,676 | 5,593,872 |
| | மொத்தம் | **43,450,531** | **49,125,458** | **32,272,042** | **16,853,416** | **48,512,914** | **42,266,570** | **24,915,606** | **17,350,964** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதனவரி மற்றும் வாடகை ரூபா 133,118 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து நிலுவை வருமானத்தை சேகரிக்கும் பணிகளை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரி மற்றும் வாடகையை விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை நீர்க் கட்டணம் | எதிர்காலத்தில் விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து நிலுவை வருமானத்தை சேகரிக்கும் | நிலுவை வருமானங்கள் விரைவாக அறவிடப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 871,476 தொகை, கேள்வி கடை வாடகை ரூபா 2,803,532 தொகை, நிலுவையாக இருந்த ஏனைய வருமானம் ரூபா 659,087 மற்றும் நிலுவை கடை வாடகை ரூபா 2,143,365 என்பன மீளாய்வாண்டின் போதும் அறவிப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றலை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரதரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டி இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 4,370,763 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 9,490,965 என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து நிலுவை வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றலை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டின் போது லுணுகல பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது பஸ்ஸற பிரதேச சபையில் இருந்து மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் ரூபா 1,117,500 தொகையும், ஊழியர் கடன் ரூபா 675,426 மற்றும் நிலுவையாக இருந்த ஏனைய வருமானம் ரூபா 659,087 தொகையும் லுணுகல பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கையளிக்கும் போது காணப்பட்ட சொத்துக்கள் பஸ்ஸற பிரதேச சபையின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை மற்றும் நடைமுறை யல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட கையளித்தல் பஸ்ஸற பிரதேச சபையின் கணக்குகளில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியை உறுதிப்படுத்துவதற்கு எந்தவொரு ஆவணமோ அல்லது விபரங்களோ எங்களிடம் காணப்படவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூலம் சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 யூலை 25 ஆம் திகதி முதல் குடுகல்பத்தன, மீதும்பிட்டிய பிரதேசத்தில் நடாத்தி செல்லப்படுகின்ற கழிப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23(அ) இன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட கழிவுப் பொருள் எரித்தல்/அகற்றுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உக்காத கழிப்பொருட்கள் திறந்த நிலத்தில் அகற்ற முடியாதிருந்த போதிலும் உக்காத கழிவுப் பொருட்கள் கழிவுப் பொருள் தளத்திற்கு அண்மையில் திறந்த நிலத்தில் போடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதியை ஈடுபடுத்தும் இயலுமையைக் கவனத்திற் கொண்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சுற்றாடல் பாதுகாப்பு பூர்த்தி செய்வதற்கும், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பிரகாரம் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |